**பேரன்புமிக்க தமிழ் ஆர்வலர்களுக்கு,**

அன்பான வணக்கம்.

சைவத்தையும் தமிழையும் முதன்மைப்படுத்தும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் 1974 இல் பேராசிரியர். க. கைலாசபதியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

1974 இல் பேராசிரியர். க. கைலாசபதியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அன்றுமுதல் புலமைத்துவம் மிக்க பேராசிரியர்கள் பலரைக் கொண்ட தனித்துறையாக இருந்து வந்தது தமிழ்த்துறை. பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, ஆ. வேலுப்பிள்ளை முதலான பேராளுமைகளின் குவிமையமாக இருந்த தமிழ்த்துறை பின்னாளில் பல பேராசிரியர்களையும், கலாநிதிகளையும் ஆற்றல்மிக்க விரிவுரையாளர்களையும் கொண்டதாக இன்றுவரை தனது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றது.

உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் தமிழில் பொது, சிறப்புக்கலைப் பட்டங்களை வழங்கிவருவதுடன் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினூடாக தமிழில் முதுகலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களையும் தமிழ்த்துறை வழங்கிவருகின்றது. தமிழ்த்துறையில் பயின்று பட்டம்பெற்ற மாணவர்கள் பலரும் இன்று சர்வதேச அளவிலும், தேசியமட்டங்களிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி தமிழ்த்துறைக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்த்து வருகின்றனர்.

ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் (1976), ஆக்கஇலக்கியமும் அறிவியலும் (1977), சங்கஇலக்கியம் (1993) முதலான புலமைசார் கருத்தரங்குகளை வெற்றிகரமாக நடாத்திய தமிழ்த்துறை தற்போது முதன்முறையாக அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடொன்றினை **'வரலாற்றுப்போக்கில் தமிழியல் ஆய்வுகள்'** என்னும் தொனிப்பொருளில் நடாத்தவுள்ளது. தமிழியல் ஆர்வலர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி மாநாட்டினைச் சிறப்புற நடாத்த உதவுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆய்வுத்தடங்கள்:**

1. தொல்காப்பியம்.
2. மரபிலக்கணம்.
3. இக்காலத் தமிழிலக்கணம்.
4. சங்க இலக்கியங்கள்.
5. காப்பிய இலக்கியங்கள்.
6. அற இலக்கியங்கள்.
7. சிற்றிலக்கியங்கள்.
8. தல புராணங்கள்.
9. நிகண்டுகள், அகராதிகள்.
10. சித்தர் இலக்கியங்கள்.
11. நவீன இலக்கியங்கள்.
12. நாட்டார் இலக்கியங்களும் பண்பாடும்.
13. ஈழத்து இலக்கிய மரபு.
14. ஈழத்து அறிஞர்களின் தமிழியற் தொண்டு.
15. ஈழத்து நவீன இலக்கியங்கள்.
16. புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள்.
17. மொழிபெயர்ப்புக்கள்.
18. தொல்லியல், வரலாற்றியல் ஆய்வுகள்.
19. சைவசித்தாந்தம்.
20. தமிழர் கட்டடக்கலை.
21. தமிழிசை, நடனம், ஓவியம், சிற்பம் முதலிய நுண் கலைகள்.
22. அயலகத் தமிழ் இலக்கியங்கள்.
23. தமிழ்க் கல்வியியல்.
24. தமிழர் மருத்துவம்.
25. அயலகத் தமிழியல் அறிஞர்கள்.
26. நூலகங்கள்.
27. தமிழ் நாடகங்கள்.
28. தமிழர் சமயம்.
29. இடப்பெயராய்வுகள்.
30. இதழியலும் மக்கள் தொடர்பியலும்.
31. ஒப்பியல் இலக்கியம்.

**கட்டுரை அமையவேண்டிய முறை:**

- ஆய்வுக்கட்டுரை சொந்த முயற்சியாக இருப்பதுடன் இதற்கு முன்னர் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததாகவும் இருக்கவேண்டும்.
- மொழிமூலம்: தமிழ்
- கணினி அச்சில் பாமினி எழுத்துருவில் அமைய வேண்டும். (Bamini எழுத்தில் Word, PDF கோப்புருவில்)
- எழுத்துக்களின் அளவு:
  - தலைப்பு: 14
  - ஆய்வுச்சுருக்கம்: 10
  - கட்டுரை: 12
- வரிகளின் இடைவெளி: 1.5
- தாள்: A4
- பக்க அளவு: 07 பக்கங்களுக்கு மேற்படாமல்.
- கட்டுரையின் அமைப்பு:
  - தலைப்பு.
  - ஆசிரியர்(கள்) பெயர்.
  - பதவிநிலை.
  - முகவரி.
  - தொலைபேசி இலக்கம்.
  - மின்னஞ்சல் முகவரி.
  - 100 சொற்களுக்கு மேற்படாத ஆய்வுச்சுருக்கம், திறவுச்சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக முழுமையான ஆய்வுக்கட்டுரை அமைய வேண்டும்.
  - ஹாவாட் (HAVARD) முறையிலான அடிக்குறிப்புக்கள், உசாத்துணை என்பனவும் இடம்பெற வேண்டும்.
- அனுப்பவேண்டிய முகவரி:
  - மின்னஞ்சல்: ict2019tamil@gmail.com
  - தபாலில்:

    பேராசிரியர். ம. இரகுநாதன்,<br>
    தலைவர், தமிழ்த்துறை,<br>
    கலைப்பீடம்,<br>
    யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,<br>
    இலங்கை.
- தொடர்புகளுக்கு: 0094 779788735<br>
  0094 212227421

**கட்டுரை அனுப்புவதற்கான காலம்:**

முழுமையான கட்டுரை: 2019 July 15 இன் முன்

ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு: 2019 August 15.

பதிவுக்காலம்: 2019 August 30 இன் முன்.

**பதிவுக்கட்டணம்:**

- உள்ளூர் ஆய்வாளர்கள்: 4,000 – 00
- உள்ளூர் பட்டதாரி மாணவர்கள்: 2,000 – 00
- வெளிநாட்டு ஆய்வாளர்கள்: 50 அமெரிக்க டொலர்.

**கட்டணம் செலுத்தும் முறை:**

நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயரிற்கு மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையின் 162 – 1 – 001 – 8 – 0000902 என்னும் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு வைப்புச்செய்யவும்.

இலங்கைக்கு வெளியே இருந்து அனுப்பப்படும் கட்டணங்களுக்கு Swift Code: PSBKLKLX என்பதைப் பயன்படுத்தவும்.

வங்கியில் பணஞ்செலுத்திய பற்றுச்சீட்டின் நகலை ict2019tamil@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கும், மூலப்பிரதியை தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை என்னும் முகவரிக்கும் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**மாநாட்டுக்குழு:**

- தலைவர்: பேராசிரியர். ம. இரகுநாதன்.
- ஒருங்கிணைப்பாளர்: பேராசிரியர் கி. விசாகரூபன்.
- செயலாளர்: திருமதி. ந. செல்வஅம்பிகை.
- பொருளாளர்: கலாநிதி. செ. சிவசுப்பிரமணியம்.
- இதழாசிரியர்கள்:
  - பேராசிரியர். ம. இரகுநாதன்.
  - திரு. ஈ. குமரன்.
  - திரு. க. அருந்தாகரன்.

**ஆலோசனைக்குழு:**

- பேராசிரியர். அ. சண்முகதாஸ்.
- பேராசிரியர். சி. தில்லைநாதன்.
- கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா.
- கலாநிதி. எம். ஏ. நு.ஃமான்.
- பேராசிரியர். வ. மகேஸ்வரன்.
- பேராசிரியர். றமீஸ்அப்துல்லா.
- பேராசிரியர். திருமதி. அம்மன்கிளி முருகதாஸ்.
- கலாநிதி. திருமதி. ம. சண்முகதாஸ்.
- அருட்கலாநிதி. எஸ். ஜெபநேசன்.



# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு – 2019

## 2020 ஜனவரி 10, 11

**கருப்பொருள்:**

**வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்**



**தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**